டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 23.10.2024 புதன்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 106 - Madurai | Online Edition

# 11 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு! வானிலை மையம் தகவல்!!

சென்னை, அக்.22

தமிழகத்தில் இன்று 11 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தென் தமிழக பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

மத்திய கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு அந்தமான் கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, மேற்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து, ஆழ்ந்த காற்றழுத்த



தாழ்வு பகுதியாக வலுப்பெற்று, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நேற்று (22ம் தேதி) காலை 5.30 மணி அளவில், மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, அதே பகுதிகளில் நிலை கொண்டுள்ளது.

இது மேலும், மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில், இன்று புயலாக வலு பெறக்கூடும். இது மேலும், வடமேற்கு திசையில் நகர்ந்து, 24-ஆம் தேதி காலை வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் தீவிர புயலாக நிலவக்கூடும்.

இது, வடக்கு ஒரிசா – மேற்கு வங்காள கடற்கரை பகுதிகளில், பூரி – சாகர் தீவுகளுக்கு இடையே, தீவிர புயலாக 24 ஆம் தேதி இரவு அல்லது 25 ஆம் தேதி காலை கரையை கடக்கக்கூடும். அச்சமயத்தில் அப்பகுதிகளில் காற்றின் வேகம் மணிக்கு 100 முதல் 110 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 120 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

இந்நிலையில் இன்று தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, சேலம், நாமக்கல், கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

24ம் தேதி தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரை, அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தரமான விதைதானா என கண்டறிந்த பின் விதைப்பதே சிறந்தது

கன்னியாகுமரி, அக்.22

விவசாயிகள் நல்ல விளைச்சல் பெற்றிட விதைகளை விதைக்கும் முன் தங்களிடமுள்ளது நல்ல தரமான விதைதானா என கண்டறிந்த பின்னர் விதைப்பதே மிகவும் சிறந்தது என ன்னியாகுமரி மாவட்டம் விதைப்பரிசோதனை ஆய்வக மூத்த வேளாண்மை அலுவலர் ஜி.அஷ்ரப் முகைதீன் தெரிவித்துள்ளார்.

நல்ல முளைப்புத்திறனும், தூய்மையும் கொண்ட விதைகளை விதைப்பதன் மூலம் நல்ல மகசூல் பெற இயலும். நல்ல முறையில் திறன் கொண்ட விதைகளை விதைப்பதால் பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்படுகிறது. சுத்தமான விதைகளை விதைப்பதன் மூலம் பிறரக கலவினம் மற்றும் களைப்பயிர்கள் பயிருடன் வளர்வதை தவிர்த்து, அதனால் ஏற்படும் அதிக செலவினத்தை தவிர்க்க முடியும். நல்ல முளைப்புதிறன் கொண்ட விதைகள் அதிக வீரிய முடையதாகவும், அதிக அளவில் உற்பத்தி திறன் கொண்டதாகவும் இருப்பதால் வயலில் இடப்படும் உரங்கள் மற்றும் பாய்ச்சப்படும் நீர் நல்ல முறையில் பயன்படுத்தப்பட்டு அதிக விளைச்சலைப் பெறமுடியும்.

எனவே விவசாயிகள் விதை உற்பத்தியாளர்கள் அனைவரும் தங்களிடமிருக்கும் விதைகளை தரமானதுதானா எனப் பரிசோதனை செய்து பயன்படுத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விதைப் பரிசோதனை செய்ய விதை மாதிரியுடன், விதை பரிசோதனை கட்டணம் ரூ.80/- செலுத்த வேண்டும்.விதை மாதிரி அனுப்ப வேண்டிய முகவரி மூத்த வேளாண்மை அலுவலர், (தொடர்பு எண் : 90439 44910) விதைப் பரிசோதனை ஆய்வகம், லூர்து அன்னை சாலை, ஜெஸந்த மஹால் பின்புறம், புன்னைநகர், நாகர்கோவில் - 629 004. விதை மாதிரியுடன் விதை மாதிரியின் பயிர், இரகம், குவியல் எண் மற்றும் தேவைப்படும் பரிசோதனை ஆகியவற்றுடன் அனுப்புநர் பெயர், முகவரி மற்றும் தொடர்பு எண்ணுடன் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ விதை மாதிரியினைக் கொடுத்து பயன்பெறுமாறு கேட்டு கொண்டுள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை மற்றும் மதிப்புக்கூட்டுதல் குறித்த விஞ்ஞானிகள் – விரிவாக்கப் பணியாளர்கள் – விவசாயிகள் இணைப்பிணை வலுப்படுத்தும் முகாம்

மதுரை, அக்.22

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டாரம் வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை






திட்டத்தின் கீழ் செங்கப்படை கிராமத்தில் 'சிறுதானிய பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை மற்றும் மதிப்புக் கூட்டுதல்' குறித்த விஞ்ஞானிகள் – விரிவாக்கப் பணியாளர்கள் – விவசாயிகள் இணைப்பினை வலுப்படுத்தும் முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மனையியல் கல்லூரி பேராசிரியர் ஜோதி லட்சுமி சிறுதானிய பயிர்களை அறுவடை செய்த பிறகு அதனை மதிப்புக்கூட்டி விற்பனை செய்யும் பொருட்களாக மாற்றுவது குறித்தும், வரகு, குதிரைவாலி, சாமை, திணை பான்ற பயிர்களில் குழந்தை முதல் பெரியவர்கள் வரை உண்ணக் கூடிய சத்துப்பொருட்கள் தயார் செய்யும் முறைகள் பற்றியும் விளக்கினார்.

கள்ளிக்குடி வட்டார வேளாண்மை அலுவலர் எம்.கீதா, சிறுதானிய பயிர்களின் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றி விவசாயிகளிடம் எடுத்துரைத்தார். துணை வேளாண்மை அலுவலர் ஆ.குமாரிலட்சுமி, சிறுதானிய பயிர்களில் அடங்கி உள்ள சத்துக்கள் பற்றி விரிவாக விளக்கினார். இப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர் திவ்யா, வேளாண்மைத் துறையில் சிறுதானியங்களுக்குரிய மானியத் திட்டங்கள் குறித்து விளக் கினார். சிறுதானிய சம்பந்தப்பட்ட கையேடுகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. பின்னர் பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டு சிறுதானியங்கள் பற்றிய பாதகைகளை கையில் ஏந்தி கொண்டு சிறுதானியப் பயிர்களின் முக்கியத்துவம் குறித்து வழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேரணியாக செங்கப்படை கிராமத்தினை வலம் வந்தனர். இந்நிகழ்ச்சியில் கருத்துக்காட்சிக்கு சிறுதானிய பயிர்களின் இரகங்கள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் மற்றும் விதைகள் விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 100 விவசாயிகள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் கள்ளிக்குடி வட்டார அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் அ.இந்திராதேவி நன்றியை தெரிவித்துக் கொண்டார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வ.லாவண்யா மற்றும் வே.யுவராஜ்குமரன் ஆகியோர் செய்திருந்தார்கள்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 22.10.2024 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 35 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 38 | 57 | உருளை (பிற) | 40 | 44 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 48 | 52 |
| 2 | வெண்டை | 50 | 54 | 58 | மேரக்காய் | 20 | 25 |
| 3 | தக்காளி (நாடு) | 40 | 44 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 32 | 37 | 60 | கேரட் | 45 | 50 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 85 | 90 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 44 | 48 |
| 6 | புடலை | 40 | 46 | 62 | நூல்கோல் | 32 | 38 |
| 7 | பீர்க்கன் | 40 | 45 | 63 | டர்னிப் | 32 | 38 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 20 | 25 |
| 9 | பாகற்காய் | 40 | 46 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 35 | 40 | 66 | காளிபிளவர் | 38 | 42 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 0 | 0 |
| 12 | அரசாணி | 15 | 18 | 68 | பூண்டு | 260 | 310 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 40 | 44 | 69 | இஞ்சி | 60 | 145 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 40 | 45 | 70 | புருக்கோலின் | 110 | 120 |
| 15 | சி வெங்காயம் | 54 | 60 | 71 | பென்னி பீன்ஸ் | 150 | 160 |
| 16 | பெ வெங்காயம்(புதியது/பழையது) | 50 | 58 | 72 | குடமிளகாய் | 60 | 66 |
| 17 | த பயறு(வெள்ளை) | 40 | 44 | 73 | ஊட்டி அவரை | 0 | 0 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 54 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 50 | 58 | 71A | | | |
| 20 | தேங்காய் | 48 | 52 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 70 | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 75 | 80 | 75 | எலுமிச்சை | 90 | 100 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 30 | 35 |
| 28 | கறிவேப்பிலை | 45 | 48 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 50 | 60 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் | 100 | 140 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 18 | 20 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 55 | 60 |
| 40 | கோவக்காய் | 40 | 44 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 56 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 56 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 22 | 26 | 96 | நேந்திரன் | 45 | 48 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 55 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 34 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 34 | | | | |

# ஈரோடு வட்டாரத்தில் வயல் விழா



ஈரோடு, அக்.22

ஈரோடு வட்டாரம், எலவமலை கிராமத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, ஈரோடு வட்டாரத்தின் சார்பாக வயல் விழா நடத்தப்பட்டது. இது குறித்து ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சென்னிமலை மா.சாமுவேல் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை மூலம் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்ட எலவமலை வருவாய் கிராமத்தை சேர்ந்த எலவமலை கிராமத்தில் உழவர்களுக்கு வயல் விழா நடைபெற்றது. இந்த விவசாயிகள் பயிற்சியில் பவானிசாகர், வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் முனைவர் ப.சிவசக்திவேலன் கலந்து கொண்டு அங்கக வேளாண்மை, இயற்கை வேளாண்மை மற்றும் மண் வள மேலாண்மை பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார். ஈரோடு மற்றும் சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சென்னிமலை மா.சாமுவேல் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். வேளாண் பொறியியல் துறையின் சார்பாக சந்திரசேகரன் கலந்து கொண்டு பொறியியல் துறையின் மானிய திட்டங்கள் பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார். உழவர் தேன் குடில் ஆர்.கதிர்வேல் அங்கக வேளாண்மையில் தேனீக்களின் பங்கு, செயல்பாடுகள், பயன்கள் மற்றும் தேனீ வளர்ப்பு முறைகள் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். அங்கக விவசாயி பி.எஸ்.ரகுபதி கலந்து கொண்டு உழவர்களுக்கு அங்கக வேளாண்மையில் அங்கக இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகளை தெளிவாக எடுத்துரைத்தார். கால்நடை மற்றும் வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை சார்பாக கண்காட்சி காட்சிபடுத்தப்பட்டது. சுப்பிரமணி, தோட்டத்தில் உள்ள தேனீ பெட்டியில் தேன் சேகரிக்கும் முறைகள் மற்றம் பராமரிப்பு முறைகள் செயல்விளக்கமாக செய்து காட்டப்பட்டது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.சா.கிருத்திகா, உழவன் செயலியின் பயன்பாடுகள் பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் இ.வைஜெயந்தி, கண்காட்சி விளக்கம் அளித்தார். உதவி வேளாண்மை அலுவலர் குமார், கலந்து கொண்டு வேளாண்மை துறையின் மானிய திட்டங்களை எடுத்துக் கூறினார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விதை முளைப்புத்திறன் மற்றும் விதைப்பரிசோதனையின் அவசியமும் பராமரிக்கும் வழிமுறைகளும்

வேளாண்மையில் முக்கிய இடுபொருட்களில் முதன்மை யானது நல்விதையே ஆகும். நல்ல தரமான விதைகளை மட்டுமே பயன்படுத்தி 20-25 சதம் வரையில் கூடுதல் மகசூல் பெறலாம் என ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

**நல் விதை என்றால் என்ன**

நல் விதை என்பது 1.நல்ல முளைப்புத்திறன், 2. குறிப்பிட்ட அளவு ஈரப்பதம், 3.இனத்தூய்மை, 4.புறத்தூய்மை மற்றும் பூச்சி நோய் தாக்காதது ஆகிய காரணிகளை தன்னகத்தே கொண்டதே ஆகும். இந்த காரணிகளில் எது ஒன்று குறைவு பட்டாலும் அதனை நல் விதை என்று சொல்ல முடியாது.




**சான்று பெற்ற விதைகளே சாலச்சிறந்தது**

சான்று பெற்ற விதைகள் உற்பத்தியானது விதையிலிருந்து விதை வரை அனைத்து நிலைகளிலும் விதை உற்பத்தியாளர் களால் பிரத்யேக கவனம் செலுத்தப்பட்டு விதைச்சான்றளிப்பு அலுவலர்களால் உரிய தருணங்களில் ஆய்விடப்பட்டு, நல் விதை உற்பத்திக்கான அனைத்து வழிமுறைகளையும் கடை பிடித்து உற்பத்தி செய்யப்படுகிறது. அனைத்து விதைக் குவியல்களின் மாதிரிகளும் விதைப்பரிசோதனை நிலையங் களில் ஆய்வு செய்யப்பட்டு பகுப்பாய்வில் தேறிய விதைகளே சான்றுஅட்டை பொருத்தப்பட்டு விநியோகம் செய்யப்படுவதால் விவசாயிகள் சான்று பெற்ற விதைகளையே வாங்கி பயன்படுத்த வேண்டும். விதை உற்பத்தி மற்றும் விநியோகத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் தேவையான கீழ் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை கடைபிடித்து விதை முளைப்புத்திறன் குறையாமல் பராமரிக்க இயலும்.

## விதை முளைப்புத்திறன் பராமரிக்க வழிமுறைகள்

### 1. விதைப்பயிரினை உரிய தருணத்தில் அறுவடை செய்தல்

விதைப்பயிரினை முதிர்ச்சி நிலையில் (Physiological Maturity Stage) அறுவடை மேற்கொள்ள வேண்டும். உதாரணமாக நெற் பயிரில் கடைப்பச்சை நிலையும், நிலக்கடலையில் உள்ஓடு கருத்த நிலையும் அறுவடைக்கு உகந்த தருணங்களாகும். இந்த தருணத்தில் அறுவடை மேற்கொண்டால் அதிகபட்ச முளைப்புத்திறன் கொண்ட விதைக்குவியலை பெறமுடியும்.

### 2. உரிய ஈரப்பத்திற்கு காயவைத்தல்

விதைகளை அறுவடை செய்தபின் உரிய ஈரப்பத்திற்கு காய வைப்பது விதை முளைப்புத்திறனை பராமரிக்க மிகமிக முக்கிய மானதாகும். ஈரப்பதம் நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக இருப்பின் முளைப்புத்திறன் விரைவில் குறைந்துவிடும். மேலும் விதைகள் பூச்சி பூஞ்சாகும் தாக்கி விதைக்கு இலாயக்கற்றதாகி விடும். எனவே முளைப்புத்திறனை பராமரிக்க விதைகளை காய வைத்தல் மிகமிக அவசியமாகும் அறுவடையான விதைகளின் ஈரப்பத்தினை படிப்படியாக குறைத்து நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு கொண்டுவர வேண்டும். உதாரணமாக நெல்லுக்கு 13சதம் பயறுவகைப்பயிர்கள் மற்றும் எண்ணெய்வித்துகளுக்கு 9 சதம் ஈரப்பதம் அதிகபட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



### 3. சேமிப்பு அறையில் கவனிக்க வேண்டியது

சேமிப்பு அறைகளில் பூச்சிகள் பெருகாமல் வெள்ளை அடித்த, அடிக்கடி சுத்தம் செய்த, தரைகள், சுவர்களில் உள்ள வெடிப்புகளை சீர் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

விதை மூட்டைகளை தரையில் அடுக்காமல் அட்டகங்களில் அடுக்கி வைத்த, 6 அட்டிக்கு மே அடுக்காமல் இருத்த, சுவற்றி இருந்து ஒரு அடி தள்ளி அடுக்கி வைத்தல். விதை சேமிப்பு அறையில் உரம் பூச்சி மருந்துகளுடன் சேர்த்து வைக்க கூடாது.

விதைகளுக்கென்று தனி சேமிப்பு அறை வைத்துக்கொள்ள வேண்டும். ஏற்கனவே சேதம் அடைந்த விதைக்குவியல்கள்/ பைகள் இருந்தால் அவற்றை உடன் அப்புறப்படுத்த வேண்டும் விதைக்குவியல்களின் முளைப்புத் திறன் மற்றும் ஈரப்பத்தினை அவ்வப்போது பரிசோதனை செய்து விதைகளின் முளைப்புத் திறன் பராமரிக்கப்பட வேண்டும்.




மேற்கண்ட வழிமுறைகளை கடைபிடித்து விதைகளின் முளைப்புத்திறனை குறையாமல் பாதுகாத்துக் கொள்ளலாம். நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட விவசாயிகள், உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள விதை மாதிரிகளை நாகப்பட்டினம், வெளிப்பாளையம் 15, காளியம்மன் கோவில் தெருவில் அமைந்துள்ள அரசு விதைப்பரிசோதனை நிலையத்தில் கொடுத்து மாதிரி ஒன்றுக்கு ரூ.80 (ரூபாய் எண்பது மட்டும்) விதைப்பரிசோதனை கட்டண மாக செலுத்தி விதை முளைப்புத்திறன் மற்றும் ஈரப்பதம் ஆகிய காரணிகளின் நிலையறிந்து தரமான விதைகளை மட்டும் விதைப்பிற்கு பயன்படுத்தி உன்னத விளைச்சல் பெறலாம் என்று நாகப்பட்டினத்திற்கான தஞ்சாவூர் சரக விதை பரிசோதனை அலுவலர் து.சிவவீரபாண்டியன் மற்றும் நாகப்பட்டினம் விதை பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் செ.பிரசன்னா தெரிவித்துள்ளனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பயிர் வளர்ச்சியில் கோமியத்தின் செயல்பாடு? தெரியுமா?



நம்முடைய விவசாயிகள் பசுவின் கோமியத்தை (COW URINE) தெய்வீக மாக தான் பார்க்கிறார்கள். ஒரு நாட்டு பசுமாட்டின் சாணமும் கோமியமும் இருந்தால் எந்த உரம் போடாமலே இதனை முழுமையாக பயன்படுத்தி 30 ஏக்கர் விவசாயம் நன்றாக செய்ய முடியும் என்று நம்முடைய வேளாண் விஞ்ஞானி பத்மஸ்ரீ சுபாஷ் பாலேக்கர் தெரிவிக்கிறார்.

நம்முடைய முன்னோர்கள் கோமியத்தை வெறுமன தெளித்து பூச்சி விரட்டியாக அந்த காலத்தில் பயன்படுத்தும் நடைமுறை காலந்தொட்டே இருந்து வருகிறது. பயிரின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், பூச்சி தாக்குதலைக் கட்டுப் படுத்தவும் உதவுகிறது. பஞ்சகாவியா தயாரிப்பில் கூட கோமியம் முக்கிய மூலப் பொருளாக உள்ளது நாம் அறிந்ததே.

**கோமியத்தை எப்படி சேகரிக்க வேண்டும்?**

கோமியத்தை கொள்கலனில் சேகரிக்க வேண்டும். மருத்துவ பயன்பாட்டிற்கு சேகரிக்க வேண்டுமானல், முதல் தடவை, மற்றும் கடைசி தடவை கோமியத்தை (COW URINE) சேகரிக்க கூடாது. அதனை தூய்மையான வெள்ளத் துணியால் வடிகட்டிய பிறகு பயன்படுத்த வேண்டும்.

**கோமியத்தில் என்ன என்ன சத்துகள் உள்ளன?**

கோமியத்தில் 95% நீரும் யூரியா 2.5% யும் இதர தாதுகள் மற்றும் என்சைம்கள் (கிரியோடின், ஆரம் ஹைட்டிராக்ஸ்டு மற்றும் கால்சியம் மெக்னிசியம்) 2.5% உள்ளது.

**தாவரங்களுக்கு எப்படி பயன்படுத்துவது?**

1) கோமியத்தை பயன்படுத்துவதற்கு முன்பு அதனை நீர்த்து போகச் செய்து பயன்படுத்த வேண்டும். அதாவது 1 பங்கு கோமியத்துடன் 10 பங்கு நீர் கலக்கி பின் அதனுடைய செறிவு தன்மை (அடர்த்தி) குறையும்.

2) நீர்த்து போன கோமியத்தை தாவரத்தின் இலைகள், கிளைகள் மற்றும் தண்டுகளின் மீது தெளிக்கலாம். இப்படித் தெளிப்பதன் மூலமாக தாவரங்களில் இலைவழியாக கோமியத்தில் உள்ள சத்துகள் உறிஞ்சப்படும்.

3) கோமியத்தை தாவரத்தின் வேர் பகுதிக்கும் மண்ணிலும் தெளிக்கலாம். நீர்ப்பாசன செய்யும் கோமியத்தின் சத்துகள் தாவரங்களால் எடுத்துக் கொள்ளப்படும்.

**பயன்படுத்தும் அளவு**

தொடக்கத்தில் பசுவின் கோமியத்தை தாவரங்களுக்கு சிறிதளவு பயன்படுத்தி பார்த்தபின் அதனால் ஏற்படும் மாற்றங்களை தெரிந்து கொண்டு பயன்படுத்த வேண்டும். ஏதேனும் பாதிப்பு இலை வாடல் கருகல் ஏற்பட்டால் தெளிக்கக்கூடாது. வேப்ப இலைகளுடன் கலந்து பூச்சி விரட்டியாக பயன் படுத்தலாம்.

**தெளிக்கும் கவனத்தில் கொள்ள வேண்டியவை?**

1) நாம் பச்சையாக உண்ணும் காய்கறி வெள்ளரி பழங்களின் மீது இதனை தெளிக்கக்கூடாது.

2) இளம் செடிகள் தண்டுகள் மற்றும் கீரை போன்ற மென்மையான பாகங்களில் இதனை தெளிக்கக்கூடாது.

3) உண்ண முடியாத பாகங்கள் உள்ள செடி கொடிகள் பயிர்வகைகள் மற்றும் அலங்கார வகைகளில் தெளிக்கலாம்.

**கோமியம் (COMUTRA) அதிகமாக மருந்தாக (MEDICINAL VALUE) பயன்படுத்தும் நாடுகள் தெரியுமா?**

நம்முடைய நாட்டில் கூட ஆயுர்வேத மருத்துவத்திலும், நைஜீரியா மற்றும் மியான்மர் நாடுகளில் உள்ள நாட்டுபுற மருத்துவர்கள் தங்களுடைய மருந்து தயாரிப்பில் கோமி-யத்தை பயன்படுத்துகிறார்கள்.

**கோமியம் அமேசானில் விற்பனை செய்யப்படுகிறதா?**

பசுவின் சிறுநீரை 'நம்முடைய முன்னோர்கள் புனித பொருளாக அனைத்து நல்ல விசேசங்களுக்கும் யாகத்திற்கும் பயன் படுத்தினர். முன்பெல்லாம் கோமியத்தை வீட்டுக்கு அருகே இலவசமாக கிராமப்புறங்களில் பெறலாம். தற்போதைய கால கட்டத்தில் கால்நடை வளர்ப்பு அதுவும் நாட்டு பசு மாடு வளர்ப்பு

அரிதான நிலையில் பிரபல நிறுவனம் அமேசான் வாயிலாக கோமியத்தை 'கோ முத்ரா' அர்கா என்ற பெயரில் ஆன்லைன் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது.

நாட்டு மாடுகளை வளர்ப்போம், அவற்றின் மூலமாக கிடைக்கும் சாணம் மற்றும் கோமியத்தை பயன்படுத்தி நஞ்சில்லா உணவு பொருளை உற்பத்தி செய்வோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**




# விவசாயிகள் முன்னேற்ற குழுவிற்கு ராபி பருவ பயிற்சி நடைபெற்றது

மதுரை, அக்.22

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டாரம், வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் 2024-25 ஆம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் கப்பலூர் கிராமத்தில் விவசாயிகள் முன்னேற்ற குழுவிற்கு ராபி பருவ பயிற்சி 21-10-24 அன்று வேளாண்மை உதவி இயக்குனர் மயில் தலைமையில் நடைபெற்றது.

அவர் தமது உரையில் வேளாண்மை துறை மூலம் விதைகள் உயிர் உரங்கள் நுண்ணூட்டங்கள் பூஞ்சான கொல்லிகள் பண்ணை கருவிகள் மற்றும் பல திட்டங்கள் மானிய விலையில் கிடைக்கிறது, முறையாக மக்களுக்கு கிடைப்பதை இது போன்ற விவசாயிகள் குழுக்கள் தாங்களும் பயன்படுத்திக் கொண்டு மற்ற விவசாயி களுக்கும் எடுத்துக் கூற வேண்டும் என்று கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் ராஜேந்திரன் கலந்து கொண்டு திட்டங்கள் குறித்தும் இதுவரை இக்கிராமத்தில் விவசாயிகளுக்கு வழங்கிய இடு பொருள்கள் பற்றி கூறினார் . அட்மா திட்ட மேலாளர் புஷ்பமாலா அட்மா திட்டத்தில் விவசாயிகள் வெளி மாநிலம் தமிழக அளவில் உள் மாநில பயிற்சிகள், மாவட்ட அளவிலான பயிற்சிகள் பல்வேறு தலைப்புகளில் விவசாயிகள் பயிற்சி பெற்று ஒரு முன்னோடி விவ சாயியாக தங்களை மாற்றிக் கொண்டு மற்ற விவசாயிகளுக்கும் கூறி தங்கள் வருமானத்தை பெருக்கி வருகிறார்கள். கப்பலூர் மற்றும் சுற்றுவட்டாரத்தில் சில கிராமங்களில் காட்டுப்பன்றிகள் மூலம் விவசாயிகள் பாதிப்படைகின்றனர். இதற்காக வேளாண்மை அறிவியல் நிலையம் மதுரையில் இயற்கை முறையில் பன்றி விரட்டிகள் கிடைக்கிறது, இதை தெளித்து விவசாயிகள் பயனடையு மாறு கேட்டுக் கொண்டார். 22-10-24 விருசங்குளம் பஞ்சாயத் திற்கு உட்பட்ட S.புளியங்குளம் கிராமத்தில் துவரையில் ஒருங் கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணை பள்ளியில் 3ம் வகுப்பாக களை கட்டுப்பாடுகள் குறித்த பயிற்சி நடைபெற்றது. இதில் வேளாண்மை துறை வேளாண்மை உதவி இயக்குனர், வேளாண்மை உதவி அலுவலர் ரவிச்சந்திரன் முன்னோடி விவசாயி அன்னவயல் காளிமுத்து ஆகியோர் கலந்து கொண்டு தொழில் நுட்பங்களை கூறினார்கள். அட்மா திட்ட உதவி மேலாளர்கள் மூவேந்திரன் கூட்ட ஏற்பாடுகளை செய்து இயற்கை பூச்சி விரட்டிகள் தயாரித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தார். உதவி தொழில் நுட்ப மேலாளர் பூவேந்திரன் பயிர்களுக்கு இட வேண்டிய சரிவிகித உரம் மேலாண்மை பற்றி எடுத்துக் கூறினார்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மி.லி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# நெல்லில் புகையான் தாக்குதல் வருமுன் காக்கும் & கட்டுப்படுத்தும் முறைகள்

கிருஷ்ணகிரி, அக்.22


நெற்பயிரில் புகையான் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து, கிருஷ்ணகிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ரூபசந்தர் கூறியதாவது, கிருஷ்ணகிரி வட்டாரத்தில் கடந்த ஒரு வார காலமாக தொடர்ந்து மழை பெறப்பட்டுள்ளது. நடப்பு பருவத்தில் வட்டாரத்தில் அனைத்து பகுதிகளிலும் நெல் சுமார் 4600 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் ஆலப் பட்டி, கிருஷ்ணகிரி, மூங்கில் புதூர், பெத்ததாளப்பள்ளி, தேவ சமுத்திரம், பெரியமுத்தூர், கும்மனூர், கட்டிகானப்பள்ளி, மாதேப் பட்டி, கெங்கலேரி, கூலியம், நெக்குந்தி, அவதானப்பட்டி ஆகிய கிராமங்களில் தற்போது நிலவும் சீதோசன நிலை காரணமாக நெல்லில் புகையான் தாக்குதல் ஆங்காங்கே தென்பட வாய்ப்புள்ளது.

புகையான் தாக்கப்பட்ட நெல் வயல்களில் புகையானின் குஞ்சு களும் வளர்ந்த பூச்சிகளும் கூட்டம் கூட்டமாக நெற்பயிரின் தூர் களில், குத்துகளின் அடிபாகத்தில் நீர் பகுதிக்கு மேலே இருந்து கொண்டு தண்டில் உள்ள சாற்றை உறிஞ்சிவிடுவதால் பயிர்கள் முதலில் மஞ்சள் நிறமாகி பின்னர் பழுப்பு நிறமாக மாறும். பயிர்கள் வட்ட வட்டமாக தீயில் கருகியது போல் காணப் படும். இந்த பூச்சியை கட்டுப்படுத்த, தேவைக்கு அதிகமாக தழைச்சத்து (யூரியா) இடுவதை தவிர்க்க வேண்டும். நீர் மறைய நீர் கட்ட வேண்டும். வயலில் உள்ள தண்ணீரை சுத்தமாக வடித்துவிட்டு, இடைவெளியில் பயிர்களை மடக்கி, இடைவெளி தெரியுமாறு செய்ய வேண்டும். இதனால் பயிருக்கு போதுமான சூரிய ஒளி மற்றும் காற்று கிடைப்பதால் பூச்சிகள் வளர்ச்சியடைய தேவையான சூழல் தடுக்கப்படுகின்றது.

வயலில் உள்ள தண்ணீரை சுத்தமாக வடித்துவிட்டு வேர்களில் நன்கு படும்படி, பூப்பதற்கு முன் அசாடிராக்டின் 1000 மி.லி, பை மெட்ரொசின் 50% WG 200 கிராம், பெனோ பியூகார்ப் 50% ஈ.சி. 500 மில்லி, பிப்ரோனில் 5% எஸ்.சி. 500 மில்லி, குளோ ரான்ட்ரேனிலிரோல் 18.5% ஈ.சி. 60 மில்லி, இதில் ஏதேனும் ஒரு மருந்தினை கைத்தெளிப்பான் கொண்டு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பூத்த பின் நீரை வடித்து விட்டு, ஏக்கருக்கு பெனோபியூகார்ப் 50% EC 500 மில்லி தேவை யான அளவு மணலில் கலந்து பயிரின் அடிப்பகுதிகளில் படும்படி தூவ வேண்டும். புகையானுக்கு எதிர்ப்பு சக்தி உருவாக்கும் பூச்சி

மருந்துகளான செயற்கை பைரித்ராய்டுகள், மீதைல் பாரத்தியான், குயினால்பாஸ் போன்ற மருந்துகள் உபயோகிப்பதை தவிர்க்க வேண்டும். பூச்சி நோய் இல்லா பயிர் சாகுபடி மேற்கொண்டு குறை வில்லா விளைச்சல் பெறவேண்டும் எனவும் அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் விபரங் களுக்கு வட்டார வேளாண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்களை அணுக வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

**பாதிக்கப்பட்ட வயலில் உள்ள இளம் குஞ்சுகள் மற்றும் முதிர்ந்த புகையான் பூச்சிகள்**



**புகையானால் பாதிக்கப்பட்ட வயல்**






# இராமநாதபுரம் மாவட்டத்தில் மழையால் பாதிக்கப்பட்ட நெல் வயலாய்வு




இராமநாதபுரம், அக்.22

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருவாடனை மற்றும் ஆர்.எஸ் மங்களம் வட்டாரத்திலுள்ள மானாவாரியாக விதைத்த நெல் பயிர்கள் சமீபத்திய மழையால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள டிஜிட்டல் பண்ணை பள்ளி விவசாயிகளுக்கான தடுப்பு பயிர் பாதுகாப்பு நடவடிக்கை குறித்த பயிற்சி மற்றும் கள ஆய்வு 21.10.24 அன்று சிறுமலைக்கோட்டை, என்.மங்களம் மற்றும் பாப்பனக்கோட்டை, கருங்குடி கிராமங்களில் நடைபெற்றது. இந்த பயிற்சியில் நெல் பயிருக்கு அசோலா இடுவது மற்றும் நோய் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சூடோமானஸ் கரைசல் தெளிப்பு போன்ற செயல் விளக்கம் (DE-MENSTRATION) செய்து வேளாண் வல்லுநரால் செய்து காட்டப்பட்டது.

இந்த நிகழ்வில் பேசிய மாவட்ட திட்ட மேலாளர் ஸ்ரீ கிருபா தனது உரையில், சமீபத்திய மழையால் எல்லா பகுதியிலும் வயலில் தண்ணிர் தேங்கியுள்ளது அதனை வடித்து விட்டு நெல் பயிருக்கான இன்சூரன்ஸ் (பயிர் காப்பீடு) நவம்பர் 15ம் தேதிக்குள் பிரிமியத் தொகையை இ.சேவை மைய வாயிலாக கட்டி விட கேட்டுக் கொண்டார். பண்ணை பள்ளி விவசாயி களுக்கு டிஜிட்டல் டைரி வழங்கி அன்றாட வேளாண் பணிகள் குறித்து அதில் பதிவேற்றம் செய்ய கூறினார்.

நிகழ்வில் பேசிய வேளாண் வல்லுநர் சந்திரசேகரன் கூறுகையில், இள பருவத்தில் உள்ள நாற்றுகள் துரிதமாக வேர் வளர்ச்சி பயிர் வளர்ச்சியடைய வயலில் உள்ள தண்ணீரை வடித்து விட்டு, பயிர் இல்ல இடங்களில் நாற்றுகள் நடவு செய்ய கூறினார். சில வயலில் பாசி படர்ந்துள்ளதை பார்வையிட்டு அவற்றை சேகரித்துஅப்புறபடுத்திவிட்டு தண்ணீரை வடித்து பின் வயல் வாய்மடையில் சணல் சாக்கில் 2 கிலோ காப்பர் சல்பேட் (மயில் துத்தம்) வைத்து பாசிகளை கட்டுப்படுத்திட கூறினார்.

நெல் வயலில் அசோலா இடுவதால் காற்றில் உள்ள நைட்ரஜனை (தழை சத்தை) இந்த பாசிகள் கிரகித்து ஏக்கருக்கு 20- 25 கிலோ தழைசத்தை தரக்கூடிய ஒரு உயிர் உரமாகும் என்றார்.

இதில் 25-30% புரத சத்து இருப்பதால் கால்நடைகளுக்கு தீவனமாகவும் பயன்படுத்தலாம் என்றார். மதிவாணன், ரமேஷ் மற்றும் செந்தில், ஜோதி வயலில் செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது.

மேலும் அசோலா உற்பத்தி செய்யும் முறைகளை கூறி தொட்டியில் வளர்க்க எற்பாடு செய்யப்பட்டது. மழையால் பாதிக்கப்பட்ட 30-45நாள் பயிரில் இளமஞ்சள் நிறமாக உள்ள இடங்களில் இலைவழியாக ஒரு கிலோ சூடாமானாஸ்/ எக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கப்பட்டது.

விவசாய நண்பர்களே ...
விவசாயம் சம்பந்தமாக உங்கள் சந்தேகங்களுக்கு...
ரிலையன்ஸ் பவுண்டேசனின்
கட்டணமில்லா உதவி தொலைபேசி எண்ணில் விளக்கம் பெறலாம்
1800-419-8800
Reliance Foundation

இதனால் குலை நோய், இலைகருகல் வேர் அழுகல் போன்ற நோய்கள் கட்டுப்படுத்த படும். தண்ணிய நன்றாக வடித்து நெல் வயல் பாய்ச்சாலுமும் காய்ச்சியலுமாக இருக்க வேண்டும். அப்போது பயிர் நன்றாக வேர் பிடித்து அதிக தூருடன் வளரும் என்றார்.

மேலும் அதிகப்படியான தகவலுக்கு கட்டணமில்லாத அலை பேசி வாயிலாக 1800 419 8800 தொடர்பு கொள்ள கேட்டுக் கொண்டார்.

திருவாடானை ஆர்.எஸ் மங்களம் வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி விவசாய நலதிட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமாய் விவசாயிகளிடத்தில் கூறப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை கள அலுவலர் லிபிகா ராமு சிறப்பாக செய்திருந்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சிறுதானிய சாகுபடியில் பாரம்பரிய தொழில்நுட்பங்கள்

## மக்காச்சோளம்

- மக்காச்சோள விதையை மாட்டுக் கோமியத்தில் 12 மணி நேரம் ஊறவைத்து விதைக்கவேண்டும்.
- விதைப்பிற்கு முன்பு, வெந்நீரில் 3-6 மணி ஊறவைத்து, பின்பு நிழலில் உலர வைத்து விதைத்தால், நல்ல முளைப்புத் திறனுடன், குருத்து துளைப்பானையும் கட்டுப்படுத்த முடியும்.
- தக்காளிக்கு பின்பு நடும் போது, அதை மேட்டுப்பாத்தியில் விதைத்தால். நிலம் தயார் செய்யும் செலவு குறையும்.
- மக்காச்சோளக் கதிர் நன்கு முதிர்ந்து காய்ந்ததை அறிய சில சோளத்தை வாயில் போட்டு கடித்தால் உலோக ஓசை வரும்.
- மக்காச்சோளத்தை கதிரின் மேல் உறையை உரிக்காமல் வைத்து மூன்று மாதத்திற்கு மேல் சேமிக்கலாம்.
- கல் படுக்கை மீது, காய வைத்த மக்காச்சோளத் தட்டையை அடுக்கி அதன் மீது நெல் வைக்கோலால் மூடி வைத்தால், அதை கால்நடைத் தீவனமாக ஒரு வருடத்திற்கு மேலாக சேமித்து பயன்படுத்தலாம்.

## கம்பு

- பறவையை விரட்ட, காக்கை போன்ற மாதிரி செய்து, அதை நீண்ட கம்பில் கட்டி நடு வயலில் வைக்கவேண்டும்.
- நொச்சி இலையை கம்புடன் கலந்து சேமித்தால், பூச்சி தாக்குதல் கட்டுப்படும்.
- கம்பு விதையை உப்பு கரைசலில் (1 கிலோ / 10 லி நீரில்) போட்டால், மிதக்கும் நோய் தாக்கப்பட்ட விதையை நீக்கி நல்ல விதையைப் பெறலாம்.
- விதைப்பிற்கு முன்பு நீரில் இரவு முழுவதும் ஊற வைத்தப்பின் விதைத்தால் விரைவாக முளைக்கும்.
- மேட்டுப்பாத்தி அமைத்து, நாற்றாங்கால் செய்து பின் விதைப்பின் நல்ல நாற்றுக்களைப் பெறமுடியும்.
- நடவுக்கு முன்பு, நாற்றுக்களின் நுனியை கிள்ளி நட்டால், பூச்சியின் முட்டை, வெள்ளை ஈக்களை அப்புறப்படுத்துவதோடு, நுனி கருகல் நோயையும் கட்டுப்படுத்தலாம்.
- இலைகளின் உட்பக்கத்தில் உட்காரும் பச்சை தத்துப் பூச்சியை கட்டுப்படுத்த, செங்கல் சூளை சாம்பலை தூவ வேண்டும்.

● இலைச்சாறு உறிஞ்சும் பூச்சியைக் கட்டுப்படுத்த, தட்டைப்பயிரை ஊடுபயிராக கம்புடன் பயிரிட வேண்டும்.

**ராகி**

● அறுவடை சமயத்தில் மழைக்காலத்தில் பாதிக்காத வகையில் இருக்கவேண்டுமெனில் நீண்ட நாள் இரகங்களை மானாவாரியாக பயிரிடவேண்டும்.

● 1:10 என்ற விகிதத்தில் மாட்டுக்கோமியம், தண்ணீர் கலந்து கரைசலில் ராகி விதையை ஊற வைத்தால், முளைப்புத்திறன் அதிகரிக்கும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.



# காலாவதியான பூச்சி மருந்துகளை விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை

## புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, அக்.22

புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்துக் கடைகளிலும் எலி விம், கரப்பான் கொல்லிகள், கொசுவிரட்டி போன்ற வீட்டுப் பயன்பாட்டுப் பூச்சிக்கொல்லிகளை விற்பனை செய்யவும், இருப்பு வைக்கவும் பூச்சிக்கொல்லி விற்பனை உரிமம் அவசியம் எனவும், உரிமம் இல்லாமல் விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனப் புதுக்கோட்டை மாவட்ட வேளாண் இணை இயக்குநர்(பொ) வி.எம். ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், புதுக்கோட்டை மாவட்டத்தில் பயிர் சாகுபடிக்கு தேவையான பூச்சிக்கொல்லி, பூஞ்சானக்கொல்லி மற்றும் களைக்கொல்லி ஆகிய மருந்துகள் மேலும் பெட்டிக்கடைகள், மளிகைக் கடைகள், பேரங்காடிகள் போன்றவற்றில் எலி விசம், கரப்பான் கொல்லிகள், கொசுவிரட்டிகள் போன்ற வீட்டில் பயன்படுத்தும் பூச்சிகொல்லிகள் ஆகியவற்றை விற்பனை உரிமம் பெறாமல் விற்பனை செய்யப்படுவது பூச்சிக் கொல்லிச் சட்டம் 1968-இன்படி குற்றமாகும்.

வீடுகளில் பயன்படுத்தும் பூச்சிக்கொல்லிகளைக் கடைகளில் விற்கவும் உரிமம் பெறுவது அவசியமாகும். எனவே, பூச்சி மருந்து விற்பனை உரிமத்தினைப் பெறத் தங்கள் பகுதி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் படிவம் II இல் விண்ணப்பிக்க வேண்டும். நகர்ப்புறத்தில் ஒரு பூச்சிக்கொல்லிக்கு ரூ.500/- என்ற வீதத்தில் அதிகபட்சம் ரூ.7500/- செலுத்தியும், ஊரகப் பகுதியில் ஒரு பூச்சிக்கொல்லிக்கு ரூ.100/- என்ற வீதத்தில் அதிகபட்சம் ரூ.1500/- செலுத்தியும் உரிமம் பெற்றுக் கொள்ளலாம்.

பூச்சி மருந்து விற்பனை உரிமம் பெற்ற விற்பனையாளர்கள் உரிமத்தில் அனுமதி பெற்ற இடங்களில் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். மேலும் அனுமதி பெற்ற நிறுவனங்களிடமிருந்து பெறப் பட்ட பூச்சிக்கொல்லி மருந்துகளை மட்டுமே விவசாயிகளுக்கு விநியோகம் செய்திட வேண்டும். விவசாயிகளுக்கு பூச்சிக்கொல்லி விற்பனை செய்யும்போது கட்டாயமாக விற்பனை பட்டியல் வழங்கப் பட வேண்டும். அதில் வாங்குவோரின் கையொப்பம் பெற்று வழங்க வேண்டும். தற்பொழுது அனைத்து பூச்சி மருந்து விற்பனை உரிமமும் நிரந்தர பூச்சி மருந்து விற்பனை உரிமம் படிவம் III இல் வழங்கப்படுகிறது.

எனவே, புதிதாக ஏதேனும் பூச்சிக்கொல்லி, பூஞ்சானக்கொல்லி மற்றும் களைக்கொல்லி ஆகியவற்றை விற்பனை செய்ய விரும்பினால் தங்கள் பகுதி வட்டார வேளாண்மை உதவி இயக்குநருக்கு விண்ணப்பித்து பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் விவசாயிகளுக்கு காலாவதியான மருந்துகளை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்படுகிறது.

மாவட்டத்திலுள்ள பேரங்காடி, அங்காடி ஆகிய விற்பனை நிலையங்களில் வீட்டில் பயன்படுத்தும் பூச்சிக்கொல்லிகளை உணவுப் பொருட்கள் அருகில் வைத்து விற்பனை செய்யாமல் தனியாக இருப்பு வைத்து விற்பனை செய்ய வேண்டும் எனவும், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மேற்கண்ட வீட்டுப் பயன்பாட்டுப் பூச்சிக்கொல்லிகளை விற்பனை செய்யக் கூடாது எனவும், இது குறித்த கூடுதல் விவரங்களுக்கு தங்கள் பகுதிக்கு அருகாமையில் உள்ள வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அவர்களை தொடர்பு கொண்டு உரிமம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காதி கிராமோத்யோக் விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் கிராம தொழில் வாயப்புகள் பற்றிய விழிப்புணர்வு முகாம்



திருவண்ணாமலை, அக்.22

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்நெல்லியில் உள்ள வேளாண்மை அறிவியல் மையம் மற்றும் காதி, கிராமத் தொழில்கள் ஆணையம், சென்னை இணைந்து வேளாண்மை அறிவியல் மையத்தில் 21.10.24ல் காதி கிராமோத்யோக் விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் கிராம தொழில் வாயப்புகள் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் உதவி இயக்குநர் கருணாநிதி நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அணைவரையும் வரவேற்று பேசினார். காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் மாநில இயக்குநர் பி.என்.சுரேஷ் தலைமை தாங்கி ஆணையத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து பேசினார்.

வேளாண் அறிவியல் மைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் வே.சுரேஷ் மையத்தின் நோக்கம் மற்றும் செயல்பாடுகள் பற்றி விவசாயிகளிடையே சிறப்புரையாற்றினார். காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையத்தின் துணை இயக்குநர் ஆர்.வாசி

ராஜன் ஆணையத்தின் மூலம் செயல்பட்டு வரும் பல்வேறு தொழில் சார்ந்த திட்டங்கள் மற்றும் அதற்குறிய மானியங்கள் குறித்தும் சிறப்புரையாற்றினார். மேலும் பயனாளிகளின் தொழில்சார்ந்த பல்வேறு சந்தேகங்கள் மற்றும் கடன் பெறுவதற்குத் தேவையான திட்ட அறிக்கை தயாரித்தல் குறித்து விளக்கம் அளித்தார்.

வேளாண்மை அறிவியல் மையத்தின் பெருந்தலைவர் ச.இரமேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, சிறிய முதலீட்டில் கிராமத்தில் குவிந்திருக்கும் பல்வேறு தொழில் வாய்ப்புகள் பற்றியும்




அதற்கு காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் செய்துவரும் பங்களிப்பு பற்றியும் சிறப்புரை ஆற்றினார்.

வேளாண்மை அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்கள் த.மார்க்ரெட், ப.நாராயணன், ம.ஐஸ்வர்யா ஆகியோர் நிலக் கடலையில் பயிர் சாகுபடி, பயிர் பாதுகாப்பு மற்றும் நிலக்கடலையில் மதிப்பு கூட்டுதல் ஆகிய தலைப்புகளில் விரிவுரையாற்றினர்.

விழாவின் முடிவில் வேளாண்மை அறிவியல் மைய கால்நடை தொழில்நுட்ப வல்லுநர் மரு.கா.மாயகிருஷ்ணன் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள பல்வேறு கிராமங்களிலிருந்து விவசாயிகள் உழவர் உற்பத்தியாளர் நிறுவன இயக்குநர்கள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் மாணவர்கள் உட்பட 112 நபர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அட்மா திட்டத்தில் விவசாயிகளுக்கான கிஸான் கோஸ்தி

அரியலூர், அக்.22

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் செயல்படும் வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தில் வயல்தின விழா மற்றும் கிஸான் கோஸ்தி எனப்படும் உழவர் திரள் விழா கிரீடு வேளாண்மை அறிவியல் மையம், சோழமாதேவியில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் (பொ.) சி.செல்வகுமார் தலைமையேற்று சிறப்புரை ஆற்றி பேசுகையில், அங்கக வேளாண்மையின் முக்கியத்துவம், வயல்களில் உயிர்வேலி அமைப்பதால் ஏற்படும் முக்கியத்துவம் குறித்தும், சம்பா சாகுபடி மற்றும் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள் அனைவரும், விதை நேர்த்தி செய்து, விதை விதைப்பதன் மூலம் பூஞ்சாண நோயினால் ஏற்படும் மகசூல் இழப்பினை தவிர்க்கலாம் எனக் கூறினார். மேலும் அங்கக வேளாண்மையில் இடுப் பொருளின் பயன்பாடு, நுண்ணூட்டச்சத்து மேலாண்மை, நுண்ணுயிர் உரங்களின் பயன்பாடுகள் பற்றி விளக்கினார். உயிர் உரங்களின் பயன்பாடு, டிரைக்கோடெர்மா விரிடி மற்றும் சூடோ மோனாஸ் போன்ற உயிரியியல் பூஞ்சாணக்கொல்லிகளின் பயன் பாடு, களை நிர்வாகம், நீர் நிர்வாகம், உரம், பூச்சி மேலாண்மை முறைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார். மேலும் வேளாண்மைத்துறையில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்கள், உழவன்செயலியின் பயன்பாடுகள், குறித்தும் எடுத்துக் கூறினார்.



கீரிடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ராஜ்கலா பேசுகையில் அங்கக வேளாண் இடுப்பொருள் உற்பத்தி முறைகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள், கோடை உழவு செய்வதன் மூலம் பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம் எனவும், பசுந்தாள் உரப்பயிர் விதைப்பு செய்து மடக்கி உழுவதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும், விதை அளவு, மஞ்சள் வண்ண அட்டை மற்றும் நீல வண்ண அட்டை பயன்படுத்துவதால் சாறு உறிஞ்சும் பூச்சிகளை எளிதில் கட்டுப்படுத்தலாம் என்றும், ஊடுபயிர் செய்வதின் முக்கியத்துவம், இனக்கவர்ச்சிப்பொறி, விளக்குப்பொறி மற்றும் நன்மை செய்யும் பூச்சிகளை கண்டறிந்து பாதுகாப்பதன் மூலம் உரம் பூச்சி மருந்து




செலவினங்களை குறைத்து குறைந்த செலவில் அதிக மகசூலை பெறலாம் என விரிவாக எடுத்துக்கூறினார். மேலும் அங்கக பண்ணையத்தின் முக்கியத்துவம், நிலக்கடலையில் ஒருங் கிணைந்த முறையில் கையாள வேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார். இந்நிகழ்ச்சியில் விதைகள், நுண்ணூட்டம், சூடோமோனாஸ், டி.விரிடி, திரவ உயிர் உரங்கள், இனக்கவர்ச்சி பொறி ஆகியவை விவசாயிகளின் பார்வைக்கு கருத்துக்காட்சி அமைக்கப்பட்டு இருந்தது. முன்னதாக வட்டார தொழில் நுட்ப மேலாளர் சகாதேவன் வரவேற்று அட்மா திட்டம் குறித்து எடுத்துக் கூறினார்.

உதவி தொழில் நுட்பமேலாளர் உா பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில் சோழமாதேவி, உதயநத்தம், கோடாலிகருப்பூர் கிராமத்தை சேர்ந்த நூற்றுக்கும் மற்பட்ட முன்னோடி விவசாயிகள் கலந்துக் கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**